செய்தி வெளியீடு எண்:977 நாள்:29.10.2021

**<u>செய்தி வெளியீடு</u>**

**கன்னட நடிகர் பவர் ஸ்டார் புனீத் ராஜ்குமார் மறைவு**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி**

மறைந்த பழம்பெரும் கன்னட நடிகர் திரு. ராஜ்குமார் அவர்களின் மகனான பவர் ஸ்டார் புனீத் ராஜ்குமார் அவர்களின் மறைவை அறிந்து பெரும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

எங்கள் இருவரது குடும்பங்களும் பல்லாண்டுகளாக நல்ல உறவைப் பேணி வந்துள்ளோம். அந்த வகையில், தனிப்பட்ட முறையிலும் இது எனக்கு இழப்பு ஆகும். பெரும்புகழ் கொண்ட நட்சத்திரமாக விளங்கியபோதும் எளிமையான மனிதராகவே புனீத் ராஜ்குமார் இருந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குத் தமது குடும்பத்தின் சார்பில் இரங்கலைத் தெரிவிக்க எங்கள் கோபாலபுரம் இல்லம் தேடி அவர் வந்தது இன்னும் என் நெஞ்சில் பசுமையாக நிழலாடுகிறது.

புனீத் ராஜ்குமாரின் மறைவால் கன்னடத் திரையுலகம் தன் மிகச் சிறந்த சமகால அடையாளங்களுள் ஒருவரை இழந்துள்ளது. இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பால் தவிக்கும் புனீத் ராஜ்குமார் அவர்களின் குடும்பத்தினருக்கும் கர்நாடக மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Deeply shocked and appalled to hear about the sudden demise of Power Star Puneeth Rajkumar who is also the son of late legendary Kannada star Rajkumar avargal. Both our families share a cordial bond for many decades. Thus, it's a personal loss to me.

He remained a humble human-being despite his stardom. Puneeth's kind act of visiting our Gopalapuram residence to offer his family's condolences for Thalaivar Kalaignar's death still lingers in my heart.

Kannada cine industry has lost one of its greatest contemporary icons. I offer my heartfelt condolences to Puneeth's family and the people of Karnataka who are mourning this irreparable loss.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9